செய்தி வெளியீடு

நாள் : 28.02.2019

**தமிழக அரசின் தொழிலாளர் துறையினரால் வழங்கப்படவுள்ள தொழில் நல்லுறவு விருது (Good Industrial Relations Award) 2017 -ம் ஆண்டுக்கு விண்ணப்பிக்கும் காலம் 30.04.2019 வரை நீட்டிக்கப்பட்டது மற்றும் 2018 ஆம் ஆண்டுக்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.**

தமிழக அரசின் தொழிலாளர் துறையினரால் வழங்கப்படவுள்ள தொழில் நல்லுறவு விருது (Good Industrial Relations Award) 2017 -ம் ஆண்டுக்கு விண்ணப்பிக்கும் காலம் 30.11.2018 –ல் முடிவுற்ற நிலையில் போதுமான விண்ணப்பங்கள் பெறப்படாத காரணத்தால் இதற்கான கால அவகாசம் 30.04.2019 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே 2017 ஆம் ஆண்டுக்கான இவ்விருதுக்கு விண்ணப்பித்தவர்கள் மீண்டும் விண்ணப்பிக்க தேவையில்லை என தெரிவிக்கப்படுகிறது.

மேலும், 2018 ஆம் ஆண்டுக்கான விண்ணப்பங்களும் வரவேற்கப்படுகின்றன. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை அனுப்பி வைக்க கடைசி தேதி 30.04.2019 ஆகும்.

2017 மற்றும் 2018 ஆண்டுக்கான விண்ணப்பங்கள் தனித்தனியே அனுப்புதல் வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பத்துடனும், விண்ணப்பக் கட்டணமாக விண்ணப்பித்தவர் தொழிற்சங்கமானால் ரூ.100/–ம், வேலையளிப்பவரானால் ரூ.250/–ம் "செயலாளர்/தனித்துணை ஆணையர், தொழில் நல்லுறவு பரிசுக்குழு, தொழிலாளர் ஆணையர் அலுவலகம், சென்னை–6 (TheSecretary /Special Deputy Commissioner of Labour, Good Industrial Relations Award Committee, Office of the Commissioner of Labour, Chennai -6) என்ற பெயருக்கு கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பாரத ஸ்டேட் வங்கியின் கருவூலக் கிளையில் தொகை செலுத்திய அசல் செலுத்துச் சீட்டு (chalan) வைத்து அனுப்ப வேண்டும்.

**கணக்குத் தலைப்பு**

"0230-00 Labour and Employment 800 Other Receipts -
AG Receipts of Labour Department
(DP Code No.0230 00 800 AG 0006)"

Scanned by CamScanner

இவ்விருதுக்குரிய விண்ணப்பங்கள் தொழிலாளர் துறையின் வலைதளத்தில் (http://www.labour.tn.gov.in/Labour) பதிவிறக்கம் செய்து விண்ணப்பிக்கலாம். மேலும் இவ்விண்ணப்பங்களை, அந்தந்த மாவட்டத்திலுள்ள தொழிலாளர் உதவி ஆணையர் அலுவலகம், தொழிலாளர் துணை ஆணையர் (சமரசம்) அலுவலகம், வட்டார தொழிலாளர் இணை ஆணையர் அலுவலகங்கள், தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார உதவி இயக்குநர் அலுவலகங்கள் மற்றும் சென்னை, DMS வளாகம், தேனாம்பேட்டையிலுள்ள தொழிலாளர் ஆணையர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக் கொள்ளலாம்

14.3.19

தொழிலாளர் ஆணையருக்காக

வெளியீடு : தொழிலாளர் ஆணையரகம், சென்னை–6.

Scanned by CamScanner